# திருவிடந்தை

**வராஹக்ஷேத்திரம் :** தமிழ்நாட்டில் வராஹப் பெருமான் எழுந்தருளியுள்ள இடங்கள் மிகக் குறைவு. ஸ்ரீமுஷ்ணம் என்னும் ஊரில் வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். திருமலையில் (திருப்பதி மலையில்) வராஹப் பெருமான் ஸேவை ஸாதிக்கிறார். திருக்கடல் மல்லையில் (மாமல்லபுரத்தில்) வராஹப் பெருமான் இருக்கிறார். இவ்வூரில் (திருவிடந்தையில்) வராஹப் பெருமான் எழுந்தருளி இருக்கிறார். இரண்யாக்ஷனைக் கொண்டு பூமியை மீட்பதற்காகவே ஸ்ரீமந்நாராயணன் வராஹாவதாரத்தை மேற்கொண்டான். வராஹப்பெருமான் இடக்கரத்தில் பிராட்டியை ஏந்திக் கொண்டு நின்ற திருக்

## ஸ்தலசயனத்துறைவார்

கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆதலால், இப்பெருமானுக்கு 'இடவெந்தை பிரான்' என்று திருநாமம் ஏற்பட்டது. திருமங்கையாழ்வாரே இவருக்கு இப்பெயரிட்டார். இந்த எம்பெருமானின் பெயரே, இவனிருக்கும் ஊருக்கும் நிலைத்து விட்டது. திருவிடவெந்தை என்பது நாளடைவில் திருவிடந்தை என்றாயிற்று.

**இடம்பிடிக்கும் பெருமாள் :** உலகில் மக்களுக்குப் பலவகையில் ஆற்றல் காணப்படுகின்றன. சிலருக்குப் பேச்சில் திறன்; சிலருக்குச் செயலில் திறன்; எம்பெருமான்களுள் இடம் பிடிப்பதில் வல்லவர் இப்பெருமான். கல்யாணக் கோலத்தில் எழுந்தருளி இருக்கும் இந்த எம்பெருமான் அமைதி நிரம்பிய ஏகாந்தமான இடத்தில் வாழ

விரும்பினர். பூமிப் பிராட்டிக்காகவே வராஹாவதாரம் கொண்டபடியால், பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்க எண்ணினர். அதற்காகவே கடற் கரையிலுள்ள சிறு கிராமத்தை (திருவிடந்தையை)த் தேடிப் பிடித்தாரோ ! ஆம் ! திருவிடந்தை அவனுடைய திருவுள்ளத்திற்கு ஏற்றதாகவே அமைந்திருக்கிறது. அவரை நினைப்பவர்களின் உள்ளத்திலே அவர் நிலையாக விரும்பி வாழ்வார். திருமங்கையாழ்வாரின் உள்ளத்தை நிலையான இருப்பிடமாகக் கொண்டார் 'பிராப்திக்கு உபாயம் அவன் நினைவு' என்கிற அழகிய அர்த்தத்தைக் காட்ட பிள்ளை லோகாசாரியர் இடவெந்தை எம்பெருமானைப் பிடித்தார். இவ்வாறு அர்ச்சாவதாரத்தில் ஊற்றமுடைய திருமங்கையாழ்வாரின் திருவுள்ளத்தையும், ரஹஸ்ய கிரந்தங்களை அருளி வாழ்வித்த உலகாரியன் திருவுள்ளத்தையும் ரஹஸ்யமாய் வாழுமிடமாகப் பிடித்தபடியால் எல்லோருடைய உள்ளத்திலும் அவாவி உறைகின்றன். எவ்வளவு சுலபமாக இடங்களைப் பிடித்து விட்டான் பாருங்கள்

எங்கே காணலாம் ? : சிலருக்கு வதரி யாத்திரை செல்லுவதில் ஊக்கம் ! பலருக்குச் செல்ல முடியவில்லையே என்ற ஏக்கம் ! தென்னாட்டிலுள்ள பலர் தென்னாட்டிலுள்ள எல்லா திவ்ய தேசங்களுக்கும் சென்றதில்லை. திருவிடந்தை, மாமல்லபுரம் செல்லும் வழியில் இருக்கிறது சென்னையிலிருந்து ஒருமணி நேரத்தில் செல்லலாம். இவ்வூருக்குச் செல்ல இயலாதபடியும் முன்பு இருந்தது இப்போது எளிதில் செல்லலாம் அப்படி இருந்தும 'கிடைத்தற்கு அரிய பயனாகவே திருவிடந்தை எம்பெருமானின் ஸேவையை நினைக்கிறார்கள் ! இந்த எம்பெருமான் நம்மை விட்டு வெகு தொலைவில் இருக்கிருஞ? இல்லை. நம்மோடு ஒட்டி வாழ்ந்து நமக்கு அருள் புரியவே அவன் நினைக்கிறன் ; நாம்தான் அவனை விட்டு வெகு தொலைவில் இருக்கிறோம். திருமங்கையாழ்வார் திருவேங்கடமுடையானை ஸேவிக்கிறர். 'இவனே தேவாதிதேவன் ! நம்முடைய நன்மைக்காகவன்றோ இறையும் அகலகில்லேன்'

என்ற பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்கிருன்! இந்தச் சேர்த்தியிலன்ரே நாம் தொண்டு செய்ய வேண்டும்!' என்று நினைத்தார் நாம் இனிமேல் ஸேவிக்கப்போகும் திவ்ய தேசங்களுள், பிராட்டியோடு சேர்ந்து எழுந்தருளி இருக்கும் எம்பெருமான்கள் யாவர்? என்று எண்ணினர். அடுத்த கணமே ஸ்ரீபார்த்தஸாரதியும், திருவிடந்தை எம்பெருமானும் ஆழ்வாரின் திருவுள்ளத்திற்கு வந்து விட்டார்கள். ஸ்ரீபார்த்தஸாரதி ருக்மிணிப் பிராட்டியோடு எழுந்தருளி இருக்கிருர். இடவெந்தை எம்பெருமானும் பிராட்டியை விட்டுப் பிரியாமல் இருக்கிருர்! இவ்விரண்டு பெருமான்களும் நினைத்த நேரத்திலேயே தம் மனத்தில் வந்து தங்கியதை நினைத்து ஆழ்வார் மகிழ்ந்தார். 'திருவல்லிக்கேணி எம்பெருமான் அருகில் இருக்கிருர். உடனே இங்குவந்து என் மனத்தில் குடிகொண்டார்; அழைத்தவுடன் வந்து உதவுகிறவன் இவன்! திருவல்லிக்கேணிக்கும் தொலைவில் திருவிடந்தை இருக்கிறது அந்த எம்பெருமானும் வந்துவிட்டாரே! என்ன கருணை!' என்று நினைத்தார். ஆழ்வாரின் எண்ணத்தை அறிந்து இடவெந்தை எம்பெருமான் முறுவல் கொண்டு (புன்னகையுடன்) மொழிந்தான் 'ஆழ்வீர்! நீர் இவ்வாறு நினைக்கலாமா? என்னை நினையாதவர்களுக்கு நான் அரியன். நீர் 'பற்றுடை அடியவர்! உமக்கு மிகவும் எளியன் நான் எங்கிருந்து வர வேண்டும்? நான்தான் உம் மனத்திலேயே இருக்கிறேனே! எவர்கள் என்னை அன்போடு ஏத்திப்போற்றுகிருர்களோ; அவர்களின் மனத்தில் மகிழ்ந்து வாழ்பவன் நான்' என்ருர் ஆழ்வாரின் மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடியது! 'இடவெந்தை மேவிய பெருமானே! இனி உம்மை எல்லோரும் 'ஏத்துவார் தம் மனத்துள்ளான் என்று அறிந்து கொள்ளட்டும் என்று மங்களாசாஸனம் செய்தார்

பார்த்தற் காயன்று பாரதம் கைசெய்திட்டு வென்ற பரஞ்சுடர்
கோர்த்தங்காயர்தம் பாடியில் குரவை பிணைந்தவெங் கோவலன்
ஏத்துவார் தம் மனத்துள்ளானிட வெந்தை மேவிய வெம்பிரான்
தீர்த்த நீர்த்தடஞ் சோலைசூழ் திருவேங்கடமடை நெஞ்சமே!

(பெரிய திருமொழி 1—8—4)

வழுவிலா அடிமை : வயிறு வளர்க்க அடிமை செய்வதும் தொண்டுதான். பகவானுக்கு அடிமை செய்வதும் தொண்டுதான் ! மனிதனுக்குச் செய்யும் அடிமை வழு அடிமை (குற்றமுள்ள அடிமை). பகவானுக்குச் செய்யும் அடிமை வழுவிலா அடிமை பகவானுக்கு அடிமை செய்வது நம் கடமை இதனால் நன்மை பெறமுடியும். நாம் பல தீவினைகளைச் செய்கிறோம். தெரிந்தும் செய்கிறோம். தெரியாமலும் செய்கிறோம். பிறருக்குத் தெரியாமல் தீய செயலைச் செய்துவிட்டதாகப் பெருமை கொள்கிறோம். செய்யும் போது சுதந்திர உணர்வுடன் செய்து விடுகிறோம். எல்லாம் சேர்ந்து நம் மீதே படையெடுத்து வருகின்றன. நாற்புறமும் சூழ்ந்து கொள்கின்றன. எங்கு சென்றாலும் விடுவதில்லை. பின் தொடர்ந்து பயமுறுத்துகின்றன.

'உலகத்தீர் ! நான் மிகக் கொடியவன் ! கொடிய தீவினைகளைச் செய்தேன். என்னைக் காப்பாற்ற அனைவரும் மறந்துவிட்டார்கள். என் தந்தை (எந்தை)யிடம் ஓடினேன் ! உனக்கே நாம் ஆட் செய்வோம்' என்றேன். அச்சத்தோடு பின்னால் திரும்பிப் பார்த்தேன் கொடுவினைகள் எங்கே ? ஒரே ஓட்டம் ! என்னைத் துரத்தி வந்த தீவினைகள் என்னைப் பார்த்தே பயந்தன ! ஏன் தெரியுமா ? இடவெந்தை எம்பெருமானுக்குத் கதொண்டனாய்விட்டேன்! அதனால்தான்! அவன் எல்லாப் பயன்களையும் கொடுப்பவன். அசையும் பொருள் அசையாப் பொருள்களையும் படைத்தவன். அவற்றைக் காப்பவன். என்னைக் காக்க அவனலன்றி யாரால் முடியும் ?

நின்று திரியும் பிறவியெல்லா நேர்வித்துக்
கொன்று திரியுங் கொடுவினையா — நின்று
வெருவிட வெந்தைக்கே விழுமிய தொண்டனானேன்
திருவிட வெந்தைக்கே செறிந்து.

(நூற்றெட்டு திருப்பதிஅந்தாதி—92)